**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No. 500/2026**

**2026 – ம் ஆண்டு ஜுன் மாதம் 10–ம் தேதி புதன்கிழமை அ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **ரெத்தினவேல்** | **தொழில்** | : **தலைமை காவலர்** |
| **த/பெ.** | : **ராமச்சந்திரன்** | **வட்டம்** | : உடையார்பாளையம் |
| **கிராமம்** | : ஏ.என். பேட்டை | **வயது** | : 43 |

**<u>10.06.2026</u>**

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஏ.என். பேட்டையில் வசித்து வருகிறேன். நான் தற்போது அரியலூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 14.04.2025 அன்று அரியலூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது நான், உதவி ஆய்வாளர் முருகன், தலைமை காவலர் 838 சிவக்குமார், ஆகிய மூவரும் அரியலூர், எருத்துக்காரன்பட்டி, வண்ணாங்குட்டை ஆகிய இடங்களில் கண்காணித்து பின்னர் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பழைய ஹவுசிங் போர்டு, ராஜீவ்நகர் ஏரியின் பின் புறம் சென்று கண்காணித்தபோது சுமார் 28 வயது மதிக்க தக்க ஒரு நபர் சாக்கு பையில் அரசு மது பாட்டில்களை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார். பின்னர் கையில் வைத்திருந்த பையை வாங்கி திறந்து பார்த்தபோது 180 ML Mclene Brandy–26, பாட்டில்கள் இருந்தன. அவரை விசாரித்தபோது அவருடைய பெயர்

அரவிந்த் த/பெ. பெருமாள், இந்திரா நகர் இலந்தைகூடம் என்று சொன்னார். அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அந்த பாட்டில்களை மகசரில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து அரியலூர் காவல் நிலைய குற்ற எண்.35/2026 சட்டபிரிவுகள் 4(1)(C) Amendment Act–ன் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த பாட்டில்களில் இருந்த மதுவை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே அழிப்பு மகசர் மூலம் அழித்துவிட்டார். என்னிடம் காட்டப்படும அந்த அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ. 2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி யாருக்கு மதுவை விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொது மக்கள் அதிகமாக நடமாடும் இடம் என்றால் சரிதான். தமிழ்நாடு அரசின் விதி முறையின் படி ஒரு தனிநபர் 4.5 லிட்டர் IMFL மதுபானத்தை சொந்த பயன்பாட்டிற்கு வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுவும் IMFL தான் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 180 ML அளவு கொண்ட Mclene Brandy–26, பாட்டில்கள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதுவுடன் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பாட்டில்கள் அரசு மதுபானக்கடையில் வாங்கப்பட்டவை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 14.04.2026 அன்று விசாரித்தார். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால்

சரிதான். அதன்பிறகு என்னை விசாரித்ததாக சொன்னால் அது தவறு என்றால் ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகசரை நான் தட்டச்சு செய்யவில்லை என்றால் சரிதான். யார் எங்கு வைத்து தட்டச்சு செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். தட்டச்சு செய்தபிறகு கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். எங்கு வைத்து கையொப்பம் வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். என் கூட வந்த காவலரும் காவல்நிலையத்தில் வைத்துதான் என்னுடன் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் புள்ளிவிபர கணக்கிற்காக பதிவு செய்த வழக்கில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் மதுவை கொட்டி அழித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஓம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.

STC .No. 500/2026

**2026 – ம் ஆண்டு ஜுன் மாதம் 10–ம் தேதி புதன்கிழமை அ.சா. 2– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 2

**பெயர்** : **சிவக்குமார்** **தொழில்** : **தலைமை காவலர்**

**த/பெ.** : **சிவமுதலி** **வட்டம்** : உடையார்பாளையம்

**கிராமம்** : காசாங்கோட்டை **வயது** : 41

**10.06.2026**

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது காசாங்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் தற்போது அரியலூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 14.04.2025 அன்று அரியலூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது நான், உதவி ஆய்வாளர் முருகன், தலைமை காவலர் 654 ரத்தினவேல் ஆகிய மூவரும் அரியலூர், எருத்துக்காரன்பட்டி, வண்ணாங்குட்டை ஆகிய இடங்களில் கண்காணித்து பின்னர் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பழைய ஹவுசிங் போர்டு, ராஜீவ்நகர் ஏரியின் பின் புறம் சென்று கண்காணித்தபோது சுமார் 28 வயது மதிக்க தக்க ஒரு நபர் சாக்கு பையில் அரசு மது பாட்டில்களை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார். பின்னர் கையில் வைத்திருந்த பையை வாங்கி திறந்து பார்த்தபோது 180 ML Mclene Brandy–26, பாட்டில்கள் இருந்தன. அவரை விசாரித்தபோது அவருடைய பெயர் அரவிந்த் த/பெ. பெருமாள், இந்திரா நகர் இலந்தைகூடம் என்று சொன்னார். அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அந்த

பாட்டில்களை மகசரில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை உதவி ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்து மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து அரியலூர் காவல் நிலைய குற்ற எண்.35/2026 சட்டபிரிவுகள் 4(1)(C) Amendment Act-ன் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த பாட்டில்களில் இருந்த மதுவை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே அழிப்பு மகசர் மூலம் அழித்துவிட்டார். என்னிடம் காட்டப்படும அந்த அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த அழிப்பு **மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி யாருக்கு மதுவை விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொது மக்கள் அதிகமாக நடமாடும் இடம் என்றால் சரிதான். தமிழ்நாடு அரசின் விதி முறையின் படி ஒரு தனிநபர் 4.5 லிட்டர் IMFL மதுபானத்தை சொந்த பயன்பாட்டிற்கு வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுவும் IMFL தான் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 180 ML அளவு கொண்ட Mclene Brandy-26, பாட்டில்கள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதுவுடன் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பாட்டில்கள் அரசு மதுபானக்கடையில் வாங்கப்பட்டவை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 14.04.2026 அன்று விசாரித்தார். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு என்னை விசாரித்ததாக சொன்னால் அது தவறு என்றால் ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகசரை நான் தட்டச்சு செய்யவில்லை என்றால்

சரிதான். யார் எங்கு வைத்து தட்டச்சு செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். தட்டச்சு செய்தபிறகு கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். எங்கு வைத்து கையொப்பம் வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். என் கூட வந்த காவலரும் காவல்நிலையத்தில் வைத்துதான் என்னுடன் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் புள்ளிவிபர கணக்கிற்காக பதிவு செய்த வழக்கில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் மதுவை கொட்டி அழித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்−I,
அரியலூர்.